

கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!
இயேசு
உங்களை
நேசிக்கிறார்
அக்டோபர், 2026
உத்தமனுக்குக்
கர்த்தர் துணை!
OCTOBER
2026



# உத்தமனுக்குக் கர்த்தர் துணை!

"நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை என்றான்" – 2நாளா. 19:11

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் ஆண்டவருடைய சமுகத்திலே உத்தமமாய் வாழ்ந்தால், காரியங்களைச் சந்தோஷமாகச் செய்யுங்கள். உத்தமனுக்குக் கர்த்தர் துணை என்றார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் உத்தமனுக்குத் துணை நிற்கின்றார். மனுஷனைத் தாயின் கருவிலே அற்புதமாய் உண்டாக்கினவராகிய கர்த்தர் துணை நிற்கின்றார். மனுஷருக்கு அப்பத்தையும் தண்ணீரையும் கொடுத்து, வாழ்ந்து சுகித்திருக்கச் செய்கிறவராகிய கர்த்தர் துணை நிற்கின்றார்.

வாழ்க்கையில் இரண்டு காரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. உண்மையாய் இருப்பது
2. உத்தமமாய் இருப்பது

ஆண்டவருக்கு முன்பாக நீங்கள் உத்தமமாய் இருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் உங்களுக்குத் துணை நிற்பார்.

## யோபுவின் வாழ்க்கை!

''ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்." – யோபு 1:1

ஒரு அலுவலகத்திலே உண்மையாய் அநேகர் வேலை செய்யலாம். ஆனால் மற்றொரு அலுவலகத்தில் அதிகமான சம்பளம் தருகிறோம் என்று சொன்னால் உண்மையாய் இருக்கிற நபர்கள் போய்விடக்கூடும். ஆனால் உத்தமமாய் நடக்கிறவர்கள் வேலை செய்கிற அலுவலகத்தை விட்டுச் செல்ல மாட்டார்கள்.



சகோதரன் J. ஆலன்பால்

இல்லை, எனக்குக் கொடுக்கிற சம்பளம் போதும். என்னுடைய எஜமான் என்னை நம்புகிறார். சம்பளத்திற்காக நான் இடம் மாறுவதில்லை என்பார்கள். இரண்டு மடங்கு அல்ல, பத்து மடங்கு சம்பளம் கொடுத்தாலும் நான் வருவதில்லை என்பார்கள். அப்படிச் சொல்லுகிறவன்தான் உத்தமன்!

இப்படிப்பட்ட உத்தமனுக்குக் கர்த்தர் துணையாயிருக்கிறார். உத்தமர்களைச் சோதனைக்காலத்திலும், பாடுகளின் காலத்திலும் புரிந்துகொள்ளலாம்.



யோபு உத்தமமாய் இருந்தார். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஏதோ ஒரு காரணத்தினாலே கர்த்தர் இதை அனுமதித்திருக்கிறார் என்று எண்ணியிருப்பார். அதினாலே கர்த்தர் அவரை இரண்டு மடங்கு ஆசீர்வதித்தார். மகிமையாய் அவரை இரட்டிப்பான நன்மைகளால் அலங்கரித்தார். அதே ஆண்டவர் இன்றும் இருக்கிறார். உங்களை இரண்டு மடங்கு ஆசீர்வதிக்க வல்லவராய் இருக்கிறார். உத்தமர்களைக் காக்கிறவராய் இருக்கிறார்.

இதில் விசேஷமாகச் சிலருக்கு ஆண்டவர் துணை நிற்பதில்லை. துணை நிற்கிறார் என்று அவர்கள் எண்ணிக்கொண்டு இருப்பார்கள். ஆனால் அது அப்படியல்ல.

''தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும் ... தோன்றுவீர்.'' - 2சாமுவேல் 22:26,27

எல்லோருக்கும் கர்த்தர் வாக்குத்தத்தம் கொடுக்கிறார். அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களுக்கு அவர் உத்தமமாய் நடத்தி முடிக்க வேண்டுமென்றால் நீங்கள் உத்தமர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் உத்தமமாய் இல்லையென்றால் அவரும் உத்தமமாய் இருக்கமாட்டார். தேவனைப் புரிந்துகொள்ளுங்கள்.

எல்லோரும் வாக்குத்தத்தம் பெறுகிறார்கள். யூதாஸ் வாக்குத்தத்தம் பெற்றான். நீங்கள் இஸ்ரவேல் கோத்திரங்களை நியாயந்தீர்ப்பவர்களாக 12 சிங்காசனத்தில் வீற்றிருப்பீர்கள் என்ற வாக்கைப் பெற்றார். ஆனால் யூதாஸ் அதை இழந்தார்.

வாக்குத்தத்தத்தைப் பெறுகிறவர்கள் அநேகர். ஆனால் அது நிறைவேறப் பெற்றுக்கொள்கிறவர்கள் சிலர்தான். ஒரு சில சதவீதத்தினர் வாக்குத்தத்தம் நிறைவேறுதலைப் பெற்றுக்கொள்ளவில்லை.

உங்களிடத்தில் பொய் இருந்தால் உங்களுக்குச் சொல்லப்படுகிறவைகள் பொய்த்துப் போகலாம். 'உத்தமனுக்கு அவர் உத்தமர்' என்று வேதம் சொல்லுகிறது. உத்தமமாய் இல்லாதவர்கள் உங்களுக்கு வேத வாக்கியம் நிறைவேறும் என்று நினைக்கவே வேண்டாம்.

வாழ்க்கையில் பாடுகள், உபத்திரவங்கள் வரும்போது கர்த்தர் கைவிடுவதில்லை. யோபுவுக்குச் சில பாடுகள் வந்தது. ஆவிக்குரிய வாழ்க்கையில் சில பாடுகள்

வழியாகத்தான் கடந்து போக வேண்டுமென்றால், ஆண்டவரே அதை அனுமதிக்கிறார்.

யோபுவைப் போல சில பாடுகள் வரும்போது நாம் பயப்படத் தேவையில்லை. அவை யெல்லாவற்றையும் கர்த்தர் தாண்டப் பண்ணுவார். நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம் என நாம் மீண்டு வந்துவிடுவோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதற்காக யோபுவைப் போல எல்லாவற்றையும் இழந்து விடுவோம் என்பதல்ல.

ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஒவ்வொரு தனித்துவத்தில் வைத்துள்ளார். நோவா பேழையைக் கட்டுகிறவராய் இருந்தார். எல்லாரும் பேழையைக் கட்டுகிறவர்களா? அல்ல. மோசே தேவனிடத்தில் 10



கற்பனைகளைப் பெற்றார். எல்லோரும் 10 கற்பனைகளைப் பெறுகிறவர்களா? அல்ல.

யோபுவின் சரித்திரத்தின் மூலம் தேவனைப் பற்றியும், ஆவிக்குரிய உலகத்தைப் பற்றியும் நாம் அறிந்துகொள்வதற்காக ஒருவேளை அவர் அந்தப் பாதையில் சென்றிருக்கலாம். தேவன் ஒருவேளை அதற்காக அவரை அழைத்திருக்கலாம். எல்லோரையும் அப்படிச் செய்வதற்கு அழைக்கவில்லை.

## நோவாவின் வாழ்க்கை!

''நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்." – ஆதியாகமம் 6:9

அன்பு தேவனுடைய பிள்ளைகளே, நோவா உத்தமனாய் இருந்தார். நோவா நீதிமானாயிருந்தார். 'உத்தமனாய் இருந்தார்' என தேவனே certificate கொடுத்திருக்கிறார். அந்த உத்தமனுடைய கையில் ஒரு வேலையைக் கொடுத்தால், அவர் அதைச் சரியாய்ச் செய்வார். உள்ளே போங்கள் என்று சொன்னால் பேழைக்குள் சென்றுவிடுவார் என்று தேவன் எண்ணியிருக்கக்கூடும்.

எனக்கு வேதத்திலே பிடித்த இரண்டு பெயர்கள். 1 நோவா. 2. தீத்து. தீத்து வந்ததினாலே கர்த்தர் எங்களுக்கு ஆறுதல் செய்தார். இந்த இரண்டு பெயர்களைத் தியானித்து நான் அழுதிருக்கிறேன்.

நோவாவின் தாழ்மை, தீத்துவின் ஆறுதலின் குணம் தேவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. நோவாவின் குடும்பத்தைத் தவிர, உலகத்தில் இருந்த எல்லோரையும் அழித்தார். அப்படியென்றால் நோவா அவ்வளவு உத்தமமாய் நடந்துகொண்டார். பேழை அரராத் மலையின்மேல் போய்த் தங்கிற்று. அந்த மலையில் செங்குத்தான இடத்திற்குச் சென்று அந்தப் பேழை நின்றால், பேழைக் கவிழ்ந்துவிடும்.

அதைக் குறித்து நோவா கவலைப்படவே யில்லை. தேவன் தன்னை அழைத்ததால் எங்கே இந்தப் பேழையை நிறுத்த வேண்டுமோ, அங்கே அதை நிறுத்துவார் என நிச்சயமாய் நோவா நம்பியிருந்தார்.



அன்பு தேவனுடைய பிள்ளைகளே, வேத ஆராய்ச்சியாளர்கள் இந்த அரராத் மலையில் ஆராய்ச்சி செய்து, இதேபோன்ற அளவிலே ஒரு பேழை இருந்தற்கான அடையாளங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல காலங்களாகத் தேடி அது காணாமல் போய்விட்டது என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவர் அதைக் கண்டுபிடித்து அரசுக்கு அறிவித்தார் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

நோவா உத்தமமாய் இருந்தார். அப்பொழுது கர்த்தர் அவருக்குத் துணை நின்றார். பேழையை நேர்த்தியாய்க் கட்டினார். உங்கள் குடும்பம்தான் பேழை. நீங்கள் நம்பி வந்து ஆண்டவருடைய பாதத்தில் நின்றுவிட்டால் குடும்பம் என்கிற பேழையைக் கவிழ விடமாட்டார். அருமையாய்க் காத்து நடத்துவார்.

தாவீதுக்கு நான் பொய்ச் சொல்லேன். நாம் உத்தமமாய் ஆண்டவருடைய சித்தத்தின்படி நடக்காமல் போனால் அவரால் கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற முடியாது.

வங்கிக்குச் சென்று நீங்கள் 10000 ரூபாயை deposit போட்டு வைக்கிறீர்கள். அவர்கள் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குப் பின்னர் இது 50000 ரூபாயாக உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் அந்த 10000ரூபாயிலிருந்து 8000 ரூபாய்க் கடன் வாங்குகிறீர்கள். அதைத் திரும்பச் செலுத்த முடியவில்லை என்று சொல்லுகிறீர்கள். அவர்கள் குறித்த நாள் வரும்போது, நீங்கள் வங்கிக்குச் சென்று 50000 ரூபாய்க் கேட்டால், அவர்கள் என்ன சொல்வார்கள்? நீங்கள் போட்ட 10000த்திலிருந்து 8000 கடன் வாங்கி விட்டீர்கள். அதற்குரிய வட்டியையும் செலுத்தவில்லை. வட்டியைக் கழித்தால் அந்த 2000 ரூபாயும் பத்தாது. ஆகவே உங்களுக்கு ஒரு பணமும் கிடைக்காது என்பார்கள். நாம் deposit செய்த பணத்திலிருந்து loan எடுத்தாலும் அதற்கும் வட்டிக் கட்ட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! Deposit செய்தோம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. ஆனால் கைகளில் கிடைக்கவில்லை. எனவே உத்தமமாயிருங்கள்.

உத்தமமாய்க் கர்த்தரைத் தேடுங்கள். கர்த்தர் “வாக்குரைத்தப் பிறகு 10 குஷ்டரோகிகளை ஆசாரியரிடத்தில் போய்க் காண்பியுங்கள்'' என்று சொல்லுகிறார். ஆசாரியர்கள் ஆலயத்தில் இருக்கிறார்கள். பிதா ஆலயத்தில் இருக்கிறார். ஆலயத்தை நோக்கி அவர்கள் நடந்தபோது, குஷ்டரோகம் தானாய் மறைந்தது. ஆகவே ஆலயத்திற்கு வருவதில் உத்தமமாய் இருங்கள்.

சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் இருப்போம். அந்தச் சிலரைப் பார்க்காமல் இருங்கள். உத்தமமாய் நடக்கிற பலரோடு

நில்லுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பார்.

உத்தமருக்கு அவர் உத்தமர். எல்லாவற்றிலும் உத்தமமாயிருங்கள். அவருக்குக் கொடுக்கிற வாக்கில் தவறாமல் இருங்கள். ஆலயத்தில் நிற்கும்போது திருமணத்தில் பிறர் முகம் பாராமல் இவருக்கே மனைவியாய் இருப்பேன் என்று வாக்குக் கொடுக்கிறீர்கள். அதில் உத்தமமாய் இருங்கள். ஆண்டவர் அப்பொழுது உங்கள் எல்லைகளை ஆசீர்வதிப்பார்.

நாம் உத்தமமாய் வாழும்போது கர்த்தர் கிரியைச் செய்கிறார். உடனே நாம் நம்முடைய உத்தமத்தினால்தான் காரியங்களைப் பெற்றுக்கொண்டோம் என எண்ணக்கூடாது.

நீங்கள் உத்தமமாக இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய உத்தமத்தை நம்பக் கூடாது. அதைப் பெரிதாக எண்ணக்கூடாது. உங்கள் அலுவலகத்தில் மற்ற 4 பேரை விட உங்களுக்கு பதவி உயர்வு கொடுக்கிறார்கள் என்றால் உடனே நீங்கள் நான் உத்தமமாய் இருந்தேன், உண்மையாய் இருந்தேன். ஆகவே இந்தப் பதவி கிடைத்தது என்று சொல்லாதிருங்கள். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்தை நான் உங்கள் உத்தமத்தினிமித்தம் கொடுக்க வில்லை. உத்தமர்களுக்குத் தேவன் துணையாய் இருக்கிறார். ஆனால் அவர் மனிதர்களுடைய உத்தமத்தைப் பார்த்துக் காரியங்களைச் செய்வதில்லை.

## உத்தமனுடைய நீதி & நற்குணம்!

''உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்; துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்.'' - நீதி.11:5

ஒரு காட்டுத் தீ பரவி ஏராளமான மரங்களை அழித்துப் போட்டது. சாம்பலாக்கியது. வேறு ஏதேனும் ஜீவராசிகள் சிக்கியிருக்கிறதா என்று பார்க்கச் சென்ற காவலர்கள் அங்கே ஒரு கோழி எரிந்து சாம்பலாய் இருந்ததைப் பார்த்தார்கள். அதைக் குச்சியினால் தள்ளிப் பார்த்தபோது, அதன் இறக்கைக்குள்ளே குஞ்சுகள் உயிரோடு இருந்தன. அவைகள் சந்தோஷமாய் ஓடி வந்தன. இந்தச் சம்பவத்தை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கோழி தான் சாம்பல் ஆனாலும், தன் குஞ்சுகளை உத்தமமாய்க் காப்பாற்ற வேண்டும் என்கிற உத்தமம் அதற்கு எப்படி வந்தது. அதுதான் வாழ்க்கையைப் புரிந்துகொள்கிற தன்மை. நான் இட்ட முட்டை. நான் அடை காத்தேன். என்னுடைய குஞ்சுகள். என் மாம்சத்தில் மாம்சமும், என் இரத்தத்தில் இரத்தமும், என் எலும்பில் எலும்புமானவைகள். அதை நான் கண்டிப்பாகக் காப்பாற்றுவேன். என் ஜீவனே போனாலும் நான் அந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றுவேன் என்று அது சாம்பலாய் மாறி நின்றிருந்தது.



உலகத்திலே ஒரே இரத்தத்தினாலே தேவன் நம்மைத் தோன்றப் பண்ணினார் என்று புரிந்து கொண்டால் உத்தமம் தானாக வந்துவிடும். மற்றவர்களை உங்கள் சொந்தக் குடும்பம்போல பார்ப்பதற்குத் தோன்றும். உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்று ஆண்டவர் கற்றுக் கொடுத்திருக்கிறார். தேவனிடத்தில் அன்புகூருவதற்கு ஒப்பான அடுத்தக் கட்டளை இது என்று கூறுகிறார். அப்படியானால் தேவன் எவ்வளவு நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாய் இருக்கிறார். ஆகவே ஜாக்கிரதையாய் நடவுங்கள்.

நம்முடைய பேச்சிலே, பழக்கத்திலே உத்தமமாய் இருக்க வேண்டும். மற்றவர்களைக் கேலி, பரியாசம் பண்ணக் கூடாது. நலமான வாழ்க்கையை ஆரம்பியுங்கள்.

உத்தமர்கள் நீதியாய் வாழ்வார்கள். இந்த நீதி அவர்களுடைய வழியைச் செவ்வைப்படுத்தும். வழியில் கரடு முரடாக இருக்கிற காரியங்களைச் செவ்வைப்படுத்தும். உத்தமனுடைய நீதி அவனைக் காக்கும் என்றாலும், நீதியாய் வாழ்வதைவிட நன்மைசெய்து நல்லவர்களாய் வாழுவது மிகவும் பெரியது.

“நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.''
– ரோமர் 5:7

நீதியாய் வாழுகிற ஒருவனுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. யோசிப்பார்கள். நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். உத்தமனும், நீதிமானாய் மாத்திரம் அல்ல. நீங்கள் நல்லவர்களாயும் இருக்க வேண்டும். ஏழைக்கு இரங்கி, திக்கற்றவர்களுக்கு உதவி செய்து, பெலவீனனுடைய பெலவீனத்தில் அவனைத்தாங்கி, விழுந்தவர்களைக் கைதூக்கி விடுங்கள். நல்லவனுக்காக ஒருவன் தன் உயிரையே கொடுப்பான் என்றால், அவன் செய்கிற நன்மை மற்றவர்களுடைய உள்ளத்தைத் தொடும்.

ஒரு சபைப் போதகர் தன்னுடைய சபை மக்களுக்காக அழுது ஜெபம் பண்ணுவார். அவருடைய சபைக்கு விரோதமாய்ப் பெரிய கலவரத்தைச் சிலர் செய்தபோது, அந்தச்சபையில்இருந்த ஒருவர், ‘எங்கள் போதகருக்காக நான் மரிக்கவும் ஆயத்தம்’ என்று சொன்னார். என்னுடைய பிள்ளைகளாக அவர்களை நான் நடத்தினேன். அவர்கள் உயிரையும் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள். எனவே நான் இன்னும் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாராம். நல்லவர்களுக்கு உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமாயிருப்பார்கள்.

உத்தமமாயிருங்கள். கர்த்தர் உங்களுக்குத் துணையாய் இருப்பார். மனிதர்களுடைய துணை வேண்டுமென்றால் நல்லவர்களாய் இருங்கள். நல்லவர்களாய் இருந்தால் உங்களுக்காக மரிக்கவும் ஒரு கூட்டம் வருவார்கள். ‘உயிர்க் கொடுப்பான் தோழன்’ என்பதைப் போன்ற மக்களைக் கர்த்தர் எழுப்புவார். நல்லவனுக்காக ஒருவன் ஒருவேளை மரிக்கத் துணிவான். ஆமென்!

# நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

## 20 வருடக் கர்ப்பப்பைக் கட்டி சுகமானது!



எனக்கு 20 வருடங்களாகக் கர்ப்பப்பையில் கட்டி இருந்தது. அதற்காக நான் அதிகமான மாத்திரைச் சாப்பிட்டதால் அல்சர் பிரச்சனை வந்தது. அதிகமாகச் சிகிச்சை எடுத்தும் சரியாகவில்லை. எனக்கு வலி வந்தால் உடம்பெல்லாம் வேர்த்துப் படபடப்பாக இருக்கும். நான் சுயநினைவு இல்லாமல் கீழே விழுந்து விடுவேன். எனக்கு இரத்த சோகைப் பிரச்சனையும் இருந்தது. ஒரு நாள் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபித்தபோது, “நீங்கள் உபவாசமிருந்து ஜெபியுங்கள். வயிற்றில் கை வைத்து ஜெபியுங்கள். கர்த்தர் சுகம் தருவார்” என்று சொன்னார்கள். நானும் உபவாசமிருந்து வயிற்றில் கை வைத்து ஜெபித்தேன். அப்பொழுது ஒரு கரம் என் வயிற்றுக்குள்ளே போனதைப்போல் இருந்தது. வயிற்றிலிருந்து ஏதோ ஒன்றை மொத்தமாகப் பிடுங்கி வெளியே போடுவதைப்போல் உணர்ந்தேன். என்னால் சுகத்தை நம்பமுடியவில்லை. அப்பொழுது வயிற்றில் கை வைத்துப் பார்த்தேன். எந்த வலியும் இல்லை. எல்லா உணவும் சாப்பிட முடிந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி சாந்தகுமாரி, தண்டையார்பேட்டை.

## 45 வருட பொடிபோடும் பழக்கத்திலிருந்து விடுதலை!



நான் 45 வருடங்களாகப் பொடிபோடும் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தேன். நான் வீடு வீடாகச் சென்று சாப்பாடு கேட்பதுபோல் ‘பொடி வாங்கிக் கொடுங்கள்’ என்று கேட்பேன். அந்த அளவிற்கு பொடிப் பழக்கத்திற்குப் பைத்தியமாகி இருந்தேன்.
ஆசீர்வாதம் டிவியில் சகோதரனும் சகோதரியும், ‘பொடிபோடும் பழக்கம் தவறு’ என்று சொன்னார்கள். ஆனாலும் என்னால் அதை விட்டு வெளியே வர முடியவில்லை. இயேசப்பா, “இந்தப் பழக்கத்திலிருந்து விடுதலை கொடுங்கள்” என்று ஜெபித்தேன். இப்பொழுது பொடியைப் பார்த்தாலே பிடிக்கவில்லை. பொடிபோடும் பழக்கத்திலிருந்து கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி அன்னம்மாள், அமைந்தகரை.

## 6 வயதிலிருந்து நடக்க முடியாத என்னை நடக்கச் செய்தார்!



எனக்கு 6 வயதிலிருந்தே கால் நடக்க முடியாமல் இருந்தேன். நான் தவழ்ந்து கொண்டுதான் இருந்தேன். எனக்கு உதவிச் செய்ய யாரும் இல்லை. ஒரு நாள் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபித்தபோது, மகளே, “நீ நடக்க விடாதபடி பிசாசு தடை பண்ணி வைத்திருக்கிறான். இப்பொழுது எழுந்து நடப்பாய்” என்று சொன்னார்கள். கர்த்தருடைய வல்லமை என்மேல் இறங்கியது. நான் அழுது ஜெபித்தேன். ஆண்டவர் நான் நன்றாக நடக்கக் கிருபை செய்தார். உற்றார் உறவினர் முன்பாகத் தலைநிமிர்ந்து நடக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## ஹெர்னியா பிரச்சனைச் சரியானது!



எனக்கு இரனியா பிரச்சனை இருந்ததால் ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். நான் உபவாசக் கூட்டத்தில் வந்து கலந்து கொண்டு ஜெப எண்ணெய் வாங்கிச் சென்று பூசிக் கொண்டேயிருந்தேன். இப்பொழுது நன்றாக இருக்கிறேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரன் முருகன், கரூர்.

## இரட்சித்து, ஆசீர்வதித்தார் தேவன்!



எனக்குக் கஷ்டங்கள் மற்றும் போராட்டம் அதிகமாக இருந்தது. நான் மீன் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறேன். நானும் என் கணவரும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தோம். ஆண்டவரைத் தேட வாஞ்சையோடு இருந்தேன். ஆனால் எப்படித் தேடுவது என்று தெரியாமல் இருந்தேன். அப்பொழுது ஒரு சகோதரி என்னை ஆசீர்வாதம் டிவி பார்க்கச் சொன்னார்கள். "எங்களுடைய கஷ்டங்கள் நீங்கி ஆசீர்வாதமாக இருக்கும்" என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் ஆசீர்வாதம் டிவியில் "எரிகோ விழும் 7 நாட்கள்" நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். அந்த நேரத்தில் கர்த்தரைக் குறித்து எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அறிந்து கொண்டேன். நானும் என் கணவரும் ஆசீர்வாதம் டிவி பார்க்க ஆரம்பித்த 3 மாதத்திலேயே இரட்சிக்கப்பட்டோம். 'உதாரத்துவமான காணிக்கையை எடுத்து வையுங்கள்' என்று சொன்னார்கள். எனக்கு "உதாரத்துவமான காணிக்கை என்றால் என்ன?" என்று எனக்குத் தெரியாது. என்னால் முடிந்த காணிக்கையை மீன் வியாபாரத்தில் வருவதை எடுத்து வைத்தேன். நான் காணிக்கைக் கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து கர்த்தர் பொருளாதாரத் தேவைகளைச் சந்தித்தார். மற்றவர்களுக்கும் கொடுக்கும்படி எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி விஜயலட்சுமி, மதுரை.

## ஊமையாக இருந்த என்னைப் பேச வைத்தார்!



நான் சிறுவயதிலிருந்து ஊமையாகத்தான் இருந்தேன். நான் எப்பொழுதும் abnormal ஆகவே இருப்பேன். என்னைச் சுற்றி உள்ளவர்கள் எல்லாரும் என்னை ஏளனமாகப் பார்ப்பார்கள். நான் சிறுவயதில் இருக்கும்போது என்னுடைய அம்மாவும் அக்காவும் விருதுநகரில் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு எனக்காக ஜெபித்தார்கள். அவர்கள் செய்த ஜெபத்தினிமித்தம் நான் இப்பொழுது நன்றாகப் பேசக் கர்த்தர் கிருபை செய்தார். அதே போல் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெறக் கர்த்தர் கிருபை செய்தார். என்னையும் சாட்சியாய் நிறுத்தின தேவனுக்குக் கோடான கோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக! – சகோதரன் விபின் , கூடல் நகர்.

## 14 வருட ஹார்மோன் பிரச்சனையை மாற்றினார்!



எனக்கு 14 வருடங்களாக ஹார்மோன் Imbalance ஆக இருந்தது. 12 வருடங்களாக முகம் முழுவதும் பருக்கள் இருந்தது. தோள்பட்டையிலும் நிறைய இருக்கும். எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. என்னால் ஆசைப்பட்ட உணவு எதுவும் சாப்பிட முடியாது. ஆசீர்வாதம் டிவியின் ஜெப உதவிக்குத் தொடர்புக் கொண்டு ஜெபித்தேன். "இயேசுவின் தழும்புகளால் குணமானீர்கள்" என்று சொல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஜெயஸ்ரீ, வாணியம்பாடி.

## தொடைப் பகுதியிலிருந்தக் கட்டி மறைந்தது!



எனக்குக் கடந்த 4 வருடங்களாகத் தொடைப்பகுதியில் கட்டி இருந்தது. அந்தக் கட்டி 10 நாட்கள் இருக்கும். சிறிய கட்டியாகத்தான் இருக்கும். பிறகு கட்டி மறைந்து விடும். மிகவும் தாங்க முடியாமல் வலி இருக்கும். இந்த முறை வந்தக் கட்டி தொடைப் பகுதியில் பெரிய கட்டியாக வந்தது. என்னால் நடக்கவே முடியவில்லை. இதனால் காய்ச்சலும் வந்தது. நான் இதைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை. நான் வேலைக்குச் சென்று வீட்டிற்கு வரும் போதும் காய்ச்சல் அதிகமாக வந்து விடும். நான் ஜெபித்து விட்டு தூங்கினேன். கர்த்தர் ஜெப எண்ணெய்ப் பூசி ஜெபிக்கும்படி உணர்த்தினார். நானும் எழுந்து ஜெப எண்ணெயைப் பூசி, ஜெபித்துவிட்டுத் தூங்கினேன். அடுத்த நாள் பார்த்தபோது பாதிக் கட்டி உடைந்தது. நான் வேலைக்குச் சென்று யாருமில்லாத இடத்திற்குச் சென்று, இயேசப்பா, "கட்டி முழுவதுமாக உடைய வேண்டும்" என்று அழுது ஜெபித்தேன். மறுநாள் பார்த்தபோது கட்டி இருந்த இடமே தெரியாமல் மறையக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி மல்லிகா, செங்கல்பட்டு.

## 5 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம்!



நான் திருமணமாகி 5 வருடங்கள் கழித்துக் கர்ப்பந்தரித்தேன். அப்பொழுது குழந்தைக்கு இதயத்துடிப்பு இல்லை என்பதால் கரு கலைந்து விட்டது. நான் சிகிச்சை எடுக்கும்போது IVF பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். 50,000 ரூபாய்ச் செலவாகும் என்று சொன்னார்கள். இயேசப்பா, “எனக்குக் குழந்தை பிறக்கும் முன் கத்தி என் வயிற்றில் படக் கூடாது” என்று ஜெபித்தேன். என்னுடைய அம்மா மாதந்தோறும் நடக்கும் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு என்னுடைய குழந்தைபாக்கியத்திற்காக அழுது ஜெபித்தார்கள். ஜெப எண்ணெயை வயிற்றில் பூசி ஜெபிப்பார்கள். எனக்குக் குழந்தை பிறந்தால் சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தார்கள். நானும் ஜெப எண்ணெயை வயிற்றில் பூசி ஜெபித்தேன். கர்த்தருடைய கிருபையினால் கர்ப்பந்தரித்தேன். ஆனால் நான் யாரிடமும் சொல்லவில்லை. ஸ்கேன் பண்ணிப் பார்த்தபோது குழந்தை நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபித்தபோது, “மகளே, நீ அழாதே, உன் மகளுக்கு குழந்தை பாக்கியத்தைக் கர்த்தர் கொடுப்பார்” என்று சொன்னார்கள். என்னுடைய அம்மாவிற்குக் கர்த்தர் குழந்தையின் கையைத் தரிசனத்தில் காண்பித்தார். அந்த நேரத்தில்தான் நானும் போன் பண்ணி கர்ப்பந்தரித்ததாகச் சொன்னேன். எனக்குக் கர்ப்பப்பையில் கட்டி இருக்கிறது என்று சொன்னார்கள். நான் யாரிடமும் சொல்லாமல் முழங்கால்போட்டு ஜெபித்து ஜெப எண்ணெயை மட்டும் பூசி வந்தேன். குழந்தை நல்லபடியாகப் பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு ஸ்கேன் பண்ணிப் பார்த்தபோது, கர்ப்பப்பையில் கட்டி எதுவும் இல்லை என்று சொன்னார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 2 வருடப் பல் வலி சுகமானது!



எனக்கு 2 வருடங்களாக ஒரு பக்கமாகப் பல் வலி இருந்தது. பல் கூச்சம் இருந்தது. என்னால் சாப்பிடவே முடியாது. ஒரு பக்கமாகத்தான் எப்பொழுதும் சாப்பிடுவேன். மேலும், கால் பெருவிரலில் வலி இருந்தது. சாதாரண சேலைப் பட்டால் கூட உயிர் போகிற அளவுக்கு வலி எடுத்தது. நான் கடந்த வருடம் ஜுன் மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதில் சகோதரன் அவர்கள், ஆண்டவர் இரத்தம் சிந்தின இடத்திலிருந்து கொண்டு வந்த கொல்கொதா எண்ணெய் என்று சொல்லி எல்லாருக்கும் கொடுத்தார்கள். நானும் அந்த எண்ணெயை வாங்கி அந்த நிமிடமே பல் மற்றும் காலில் பூசி ஜெபித்தேன். இயேசப்பா, “எனக்கு சுகம் கொடுங்கள்” என்று ஜெபித்தேன். அன்றிலிருந்து இன்று வரை எந்த வலியும் இல்லை. நன்றாக எல்லாப் பக்கமும் சாப்பிட முடிகிறது. கால் பெருவிரலிலும் வலி இல்லை. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி செல்வ மனோகரி, மதுரை.

## தங்கைக்கு வலிப்பு வியாதி சுகமானது!



கடந்த வாரம் திங்கள் கிழமை என் தங்கைக்கு வலிப்பு நோய் வந்தது. ஆசீர்வாதம் டிவியின் ஜுன் மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபவேளையில், “வலிப்பு நோய் இருக்கிறவர்களைக் கர்த்தர் சுகமாக்குகிறார்” என்று சொன்னார்கள். இப்பொழுது நன்றாக இருக்கிறாள். வலிப்பு நோய்ப் பிரச்சனையே இல்லை. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கிரேனப், மாதவரம்.

## பிசாசுப் போராட்டத்திலிருந்து விடுதலை!



என்னுடைய குடும்பத்தில் பிசாசுப் போராட்டம் அதிகமாக இருந்தது. எங்களால் வெளியில் எங்கேயும் செல்ல முடியவில்லை. நாங்கள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தோம். நாங்கள் ஆசீர்வாதம் டிவிதான் தினமும் பார்ப்போம். சகோதரன் கொடுக்கிற தேவசெய்தியின் மூலம் பிசாசின் கட்டுகளிலிருந்து கர்த்தர் எங்களை விடுவித்து சாட்சியாக வாழக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ஷீலா, மதுரை.

## முகத்தில் இருந்த பருக்கள் மறைந்தது!



எனக்கும் என் பிள்ளைகளுக்கும் முகத்தில் பருக்கள் கட்டி கட்டியாக வரும். 2017ல் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். "எங்களுக்கு முகத்தில் உள்ள பருக்கள் மறைந்தால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று ஜெபித்துச் சென்றேன். ஆசீர்வாதம் டிவியில் YouTubeல் சகோதரன் செய்தி கொடுத்தார்கள். அந்தச் செய்தியில், "முகத்தில் உள்ள அலர்ஜியினால் வந்த பருக்கள் எல்லாம் மறைகிறது" என்று சொல்லி ஜெபித்தார்கள். நானும் 3 பேர் முகத்திலும் ஜெப எண்ணெய்ப் பூசி ஜெபித்தேன். கர்த்தர் 3 பேருக்கும் முகத்தில் உள்ள பருக்கள் மறையக் கிருபை செய்தார். மேலும் 2013ல் எனக்கு திடீரென்று எதிர்பாராத விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. 1000 லிட்டர் கேன் உள்ள tankar லாரி என் காலில் ஏறியது. இரண்டு காலிலும் இரும்பு வைத்தார்கள். ஆனாலும் கர்த்தர் 40 நாட்களில் நன்றாக நடக்கக் கிருபை செய்தார். என்னுடைய மகளுக்கு 2017ல் வேலையில்லாமல் இருந்தது. உபவாசக் கூட்டத்தில் சகோதரி ஜெபித்தபோது, "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்று சொன்னார்கள். அதேபோல் அவளுக்கு நல்ல வேலை கிடைத்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி மணி மலர், வாணியம்பாடி.

## பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை!



எனக்கு ஒரு வருடமாகப் பிசாசுப் போராட்டமாக இருந்தது. என் வயிற்றில் ஏதோ ஒன்று உருண்டு வரும். கீழே உட்காரும்போது அது முதுகில் வந்து நிற்பதுபோல் இருக்கும். நானும் அழுது ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். என்னுடைய மகளும் வீட்டிற்குள் இருந்தால் சரீரம் முழுதும் எரிச்சலாக இருக்கிறது என்று சொல்லுவாள். நானும் காலையில் எழுந்து என் முகத்தைக் கழுவி விட்டுப் பார்த்தால், ஏதோ ஒரு வயதான முகம்போல் தோன்றும். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. "உன்னுடைய மகளுக்குத் திருமணம் நடக்காது. அவள் ஓடிப் போய் விடுவாள்" என்று என்னிடம் யாரோ சொல்வது போல் இருக்கும். அடுத்தநாள் காலையில் பார்த்தால் என்னுடைய தோற்றம் குள்ளமாக வயதான பெண் கூன் விழுந்ததுபோல் இருப்பதை உணர்ந்தேன். சோர்வாகக் காணப்பட்டேன். ஜூன் மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஆலயத்திற்கு உள்ளே வர வர எனக்கு கால் நடக்க முடிந்தது. சகோதரன் ஜெபித்தபோது, வயிற்றிலிருந்து ஏதோ ஒன்று கீழே விழுந்ததுபோல் உணர்ந்தேன். கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



கடந்த 10 வருடங்களுக்கு முன்பு பிசாசுப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டு இருள் நிறைந்த வாழ்க்கையில் வாழ்ந்து வந்தேன். யார் என்ன சொன்னாலும் அதைச் செய்வேன். ஆனால் ஒரு விடுதலையும் இல்லை. எனக்கு யாருமே இல்லை. அந்த நேரத்தில் ஆசீர்வாதம் டிவியைப் பார்க்க ஆரம்பித்தேன். அதன் மூலம் நிறைய வசனங்களைச் சகோதரன் மற்றும் சகோதரியின் மூலமாக அறிந்தேன். அந்த வசனத்தை வைத்து ஒவ்வொரு நாளும் ஜெபித்தேன். என்னுடைய வாழ்க்கையில் நல்ல மாற்றம் வந்தது. திருமணத்தை வைத்து நிறையப் போராட்டங்கள் இருந்தது. கர்த்தர் எல்லாப் போராட்டத்தையும் தடைகளையும் நீக்கி எனக்கு நல்ல ஆவிக்குரிய கணவரைக் கொடுத்தார். பிறகு 3 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. "கர்த்தர் இரட்டிப்பான நன்மையைத் தருவேன்" என்று சொன்னதைப்போல் இரட்டைப் பிள்ளைகளைக் கர்த்தர் கொடுத்தார். ஆனால் ஒரு பிள்ளையை மாத்திரம் காப்பாற்ற முடிந்தது. கர்த்தர் அந்த வேதனையிலிருந்தும் வெளிவரக் கிருபை செய்தார். வேத வசனங்களை 10 முறையாவது நான் வாசிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். நான் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்து ஸ்தோத்திரபலிகளைச் சொல்லச் சொல்ல என் வாழ்க்கை நன்றாக மாறியது. வசனம் என்னை வாழ வைத்தது. கர்த்தர் செய்த அற்புதத்தை என் குடும்பத்தார் அறிந்து 15 பேர் திருச்சபைக்கு வருகிறார்கள். அவர்களுக்கும் கர்த்தர் விடுதலை கொடுத்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஹெப்சிபா, மதுரை.

## பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை & ஆசீர்வதித்தார் தேவன்!



2014ல் நானும் என் குடும்பமும் பிசாசுப் போராட்டத்தினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தோம். குடும்பத்தில் எல்லாருக்குள்ளும் சமாதானமில்லாமல் இருந்தது. அந்த நேரத்தில் விருதுநகரில் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். நாங்கள் உள்ளே வரும் போதே சகோதரன், “ஒரு குடும்பம் கூட்டத்திற்கு வரும்போது பிசாசுப் போராட்டத்தினால் சமாதானமில்லாமல் வந்திருக்கிறீர்கள். திரும்பிச் செல்லும்போது ஆசீர்வாத உணவைச் சாப்பிட்டு விடுதலையோடு செல்வீர்கள்” என்று சொன்னார்கள். அதே போல் நாங்கள் ஜெபம் முடிந்து ஆசீர்வாத உணவைச் சாப்பிட்டுத் திருப்தியோடு வீட்டிற்குச் சென்றோம். அன்றிலிருந்து இன்று வரை எங்களுடைய குடும்பத்தில் சமாதானத்தைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். மேலும், நான் ஆசீர்வாதம் டிவியைத் தினமும் பார்ப்பேன். எங்கள் கடையிலும் தினமும் ஆசீர்வாதம் டிவி ஓடிக் கொண்டேயிருக்கும். கடைக்கு வருகிறவர்கள் எல்லாரும் சகோதரன் மற்றும் சகோதரியின் செய்தியைக் கேட்டு மிகவும் ஆறுதலாக இருக்கிறது என்று சொல்வார்கள். நான் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தேன். நான் வெறுமையாகத் திருமணம் முடித்துதான் இங்கு வந்தேன். என்னிடம் எதுவும் இல்லாமல் இருந்தது. அந்த நேரத்தில் நான் மிகவும் அழுதுக் கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆசீர்வாதம் டிவியில் சகோதரி செய்தி வேளையில், “முட்செடிக்குப் பதிலாக மிருதுச் செடிகளையும் காஞ்சொறிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சத்தையும் முளைக்கப் பண்ணுவேன்” என்ற வசனத்தை வைத்துப் பேசினார்கள். அந்த நேரமே என்னுடைய அப்பா கேரளாவில் உள்ள 50 சென்ட் நிலத்தை எனக்கு எழுதித் தருகிறேன் என்று சொன்னார்கள். என்னால் நம்பவே முடியவில்லை. எனக்கு எழுதிக் கொடுக்கும்போது அந்த நிலம் வெறும் காடாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது பெரிய டூரிஸ்ட் இடமாக மாறியது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## தொழிலைக் கொடுத்தார், தேவையைச் சந்தித்தார்!



நான் 12ஆம் வகுப்புத் தோல்வி அடைந்ததால் எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. 2024ல் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். Auto வாங்கித் தொழில் செய்யலாம் என்ற விருப்பத்தைக் கர்த்தர் கொடுத்தார். அதனால் நானும் என் அம்மாவும் எல்லாரிடமும் பணஉதவி கேட்டோம். பின்பு என்னுடைய அம்மா, அக்கா மற்றும் தங்கையின் நகையை வைத்து Auto வாங்கினேன். ஆனால் அந்தக் கடனை எப்படி அடைப்பது என்று தெரியாமல் மிகவும் சோர்ந்து மனஅழுத்தத்தில் இருந்தேன். 2024ல் செப்டம்பர் மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரர் ஜெபித்தபோது, “நீ சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்” என்று சொன்னார்கள். அதன்படிக் கர்த்தர் என் வாழ்க்கையில் அற்புதம் செய்தார். கடனை அடைத்து, அனைத்து நகையையும் திருப்பிக் கொடுத்தார். இப்பொழுது 2 வருடங்களாக Auto ஓட்டக் கர்த்தர் கிருபை செய்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!
– சகோதரன் சந்தோஷ், அயனாவரம்.

## பெலன் தந்தார் தேவன்!



எனக்குக் கர்ப்பப்பையில் கேன்சர் இருக்கிறது. அதற்குக் கரண்ட் வைக்க வேண்டும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். என்னுடைய அம்மா ஆலயத்திற்குச் செல்வதற்கு மட்டும் அனுமதி கேட்டார்கள். 30 கரண்ட் வைக்கச் சொன்னார்கள். ஆனால் நான் 17 கரண்ட் தான் வைத்தேன். என்னால் எதையும் சாப்பிட முடியாது. எது சாப்பிட்டாலும் வாமிட் வரும். மோஷன் வரும். என் சரீரம் மெலிந்து போனது. அந்த நேரத்தில் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் சகோதரன் சகோதரி ஜெபித்த ஜெபமும் அவர்கள் கொடுத்த ஜெப எண்ணெயும் எனக்கு சுகத்தைக் கொடுத்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இன்று காட்டு வேலை செய்து என் பிள்ளைகளை நடத்தும் அளவுக்கு பெலனைக் கொடுத்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## குடும்பத்தை இணைத்தார், 20 லட்சக் கடனை அடைக்கச் செய்தார்!



எனக்குத் திருமணமாகி 12 வருடங்களாகிறது. என்னுடைய திருமண வாழ்க்கை நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. என்னுடைய கணவர் ஒரு வருடமாக வேலையினிமித்தம் வெளிமாநிலத்திற்குச் சென்றார். சென்ற இடத்தில் தீயப் பழக்கத்தில் ஈடுபட்டிருந்தார். அதனால் என் குடும்பத்தைப் பற்றி நினைக்கவே இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் பேசுவதையும் நிறுத்தினார். வியாபாரத்தில் 20 லட்சம் ரூபாய்க் கடன் இருந்தது. அந்தக் கடனை எப்படி அடைப்பது என்று தெரியவில்லை. மிகவும் வேதனையோடு இருந்தோம். அப்பொழுது ஆசீர்வாதம் டிவியின் சென்னை உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபித்தபோது, “கர்த்தர் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்” என்ற வசனத்தைச் சொல்லி ஜெபித்தார்கள். நானும் அந்த வசனத்தை வைத்துத் தினமும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். இப்பொழுது என் கணவர் சந்தோஷமாக எங்களோடு வந்து சேர்ந்து விட்டார். சமீபத்தில் அவர் வெளிநாடு சென்று சம்பாதித்த பணத்தை வைத்து 20 லட்சம் கடனையும் அடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ரேவதி, தேனி.

## குழந்தைபாக்கியம் தந்தார்!



எனக்கு ஒரு வருடமாகக் குழந்தைபாக்கியம் இல்லாமல் இருந்தது. கடந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். பிள்ளைச் செல்வத்திற்காக ஜெபித்தேன். “குழந்தை பிறந்தால் எடைக்கு எடை காணிக்கைச் செலுத்துவேன்” என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி மெர்லின், மாங்காடு.

## கர்த்தர் என்னோடு பேசினார்!



நான் குழப்பத்தோடும் பிரச்சனையோடும் கேள்விக்குறியாகத் தான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபித்தபோது, “பலர் வாழ்க்கையில் கர்த்தர் என்னோடு இருக்கிறாரா, என்னை மெய்யாக நடத்துகிறாரா என்று கேள்விக்குறியோடு வந்திருக்கிறீர்கள். கர்த்தர் அதற்கெல்லாம் ‘ஆம்’ என்று சொல்லி certificate கொடுக்கிறார்“ என்று சொன்னார்கள். கர்த்தர் எனக்காகவே சொன்னதுபோல் இருந்தது. மிகவும் ஆறுதலாக இருந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோ. இம்மானுவேல், கிண்டி.

## மகளுக்குக் குழந்தைபாக்கியம் தந்தார்!



2015ல் என்னுடைய மகளுக்குத் திருமணமானது. மகளுக்கு 7 மாதத்திற்குள் அபார்ஷன் ஆகியதால் மிகவும் வேதனையாக இருந்தோம். தினமும் ஆசீர்வாதம் டிவிதான் பார்த்துக் கொண்டேயிருப்பேன். ஆசீர்வாதம் டிவியில் சகோதரி ஜெப வேளையில், “ஒரு சகோதரி மகளுக்கு அபார்ஷன் ஆனதால் அழுதுக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் இரட்டிப்பான நன்மையைக் கட்டளையிடுவார்” என்று சொன்னார்கள். எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. நானும் சேர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். 2016ல் மே மாதம் மதுரையில் நடந்த உபவாசக் கூட்டத்தில் சகோதரன் மூலம் கர்த்தர் என்னோடு பேசினார். “என்னுடைய மகளுக்கு மீண்டும் குழந்தை பிறந்தால் நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து சாட்சி சொல்லுவேன்” என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். 2018ல் கர்த்தர் அழகான பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி மேரி ஜனோவா, கே.புதூர்.

## ஊழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!

GLORY TO GOD!

## நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

சென்னை உபவாசக் கூட்டம் 29.8.2026

### கேன்சர் கட்டி மறைந்தது, மகளுக்கு 17 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம், சொந்த வீடுகள் கொடுத்தார்!



நான் ஆசீர்வாதம் டிவி பார்க்க ஆரம்பித்ததிலிருந்து கர்த்தர் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொடுத்தார். நாங்கள் நிறையக் காரியங்கள் தெரிந்து கொண்டோம். மேலும் 2013ல் எனக்குக் கழுத்தில் கட்டி இருந்தது. பயாப்சி டெஸ்ட் எடுத்துப் பார்த்தபோது 3 முறையும் கேன்சர் கட்டி என்றுதான் வந்தது. ஆசீர்வாதத் திருச்சபைக்கு வந்து ஜெப எண்ணெய் வாங்கிச் சென்று பூசினேன். மீண்டும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது 15 நாட்கள் மருத்துவமனையில் சேர்க்கச் சொன்னார்கள். அப்பொழுது எல்லா டெஸ்ட்டும் எடுத்துப் பார்த்தபோது எல்லாம் நார்மல் என்று வந்தது. கர்த்தர் கட்டி மறையக் கிருபை செய்தார். மேலும், என்னுடைய மூத்த மகளுக்கு 17 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. கடந்த வருடம் நடந்த “எரிகோ விழும் 7 நாட்கள்” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஜெபித்தோம். அந்த மாதத்திலேயே என் மகள் கர்ப்பந்தரிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். என்னுடைய 2வது மகளுக்குத் திருமணமாகி 2 குழந்தையைக் கொடுத்து கர்த்தர் ஆசீர்வதித்தார். ‘நெருக்கத்திலும் பெருக்கத்தை ஆண்டவர் கொடுப்பார்’ என்ற வார்த்தையின்படி என்னுடைய 2 மகள்களுக்கும் சொந்த வீடு கட்டிக் கொடுக்கக் கிருபை செய்தார். கர்த்தர் என்னையும் ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்.

– சகோதரி ராஜேஸ்வரி,
அலங்காநல்லூர்.



ஒவ்வொரு மாதமும் சென்னையில் நடைபெறுகிற ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

### 3 வருட இரத்தசோகை நீங்கியது!



நான் 3 வருடங்களாக இரத்த சோகைப் பிரச்சனையினால் மிகவும் பாடுபட்டேன். இரத்தத்தின் அளவு 6 தான் இருந்தது. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபித்தபோது, “இரத்த சோகையினால் பாடுபடுகிறவர்களுக்குக் கர்த்தர் விடுதலை கொடுக்கிறார்” என்று சொன்னார்கள். அதே போல் நானும் ஜெபத்தோடு test பண்ணிப் பார்த்தபோது இரத்த சோகையின் அளவு 10ஆக உயர்ந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி விக்டோரியா, பெரம்பூர்.




# பாதாம்

நட்ஸ்களின் ராஜாவாக விளங்கும் பாதாமில் நிறைய நன்மைகள் உள்ளடங்கியுள்ளன. இதில் அதிகளவில் ஆன்டிஆக்ஸிடன்ட்களும் குறிப்பாக வைட்டமின் 'பி2', வைட்டமின் 'ஈ', பொட்டாசியம், மக்னீசியம், இரும்புச்சத்து, மாங்கனீசு, புரோட்டீன், பாஸ்பரஸ், கால்சியம் மற்றும் காப்பர் நிறைந்துள்ளது.

## வகைகள்

பாதாமில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. இனிப்பு பாதாம் (இதை நாம் உண்கிறோம்) மற்றும் கசப்பு பாதாம் (இவை பச்சையாக உண்ணும் போது நச்சுத்தன்மைக் கொண்டவை. எண்ணெய் தயாரிக்கப் பயன்படுகின்றன).

பாதாமில் 30க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. இவற்றில் மிகவும் பொதுவான வகை நான்பரேல் ஆகும். இது கலிபோர்னியாவில் பரவலாகப் பயிரிடப்பட்டு, மொத்த பாதாம் உற்பத்தியில் 40% பங்களிக்கிறது.

## சிறந்த நேரம்

கலிபோர்னியாவில் ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை பாதாம் அறுவடைச் செய்யப்படுகிறது. ஜம்மு–காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேசம் சுமார் 8 ஆயிரம் டன் பாதாம் உற்பத்தி செய்கின்றன. ஜம்மு காஷ்மீர் (Jammu and Kashmir) மாநிலம் தான் அதிக அளவில் பாதாம் (Almonds) உற்பத்தி செய்யும் மிகப்பெரிய பகுதியாகும். இது இந்தியாவின் மொத்த பாதாம் உற்பத்தியில் சுமார் 91 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டுள்ளது.

## வெவ்வேறு பெயர்கள்

பாதாம் மரத்திற்குப் பல்வேறு பிராந்தியங்களில் வெவ்வேறு பெயர்கள் உள்ளன. ஆங்கிலத்தில் இது 'ஸ்வீட் ஆல்மண்ட்' (இனிப்பு பாதாம்) என்றும், ஸ்பானிஷ் மொழியில் பாதாம் 'அல்மென்ட்ரோ' (almendro) என்றும், பிரெஞ்சு மொழியில் 'அமாண்டே' (amande) என்றும் அறியப்படுகிறது. கிரேக்க மொழியில் பாதாம் 'அமிக்டாலியோ' (amygdalia) என்றும் இத்தாலிய மொழியில் 'மண்டோர்லோ' (mandorlo) என்றும் குறிப்பிடப்படுகிறது.

1. பாதாம் உடல் நலத்திற்கு மட்டுமல்ல, இதய ஆரோக்கியத்திற்கும் மிகவும் நன்மை தரும். இதில் உள்ள நல்ல கொழுப்புகள் (monounsaturated fats), bad cholesterol (LDL)ஐ குறைத்து good cholesterol (HDL) ஐ சரியாக maintain செய்ய உதவுகின்றன. இதனால் இரத்த ஓட்டம் (blood flow) smooth ஆக இருக்கும். இதய நோய் (heart disease) அபாயம் குறையும். இதோடு, பாதாமில் உள்ள dietary fiber உடல் நீரிழிவு, blood sugar spikeஐ கட்டுப்படுத்தும். இதுவும் இதயத்தைப் பாதுகாக்கும் முக்கிய அம்சம்.



2. நீரிழிவு நோய் உருவாகும் அபாயத்தில் உள்ள பதின்ம வயதினர் மற்றும் இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் தினமும் 56 கிராம் பாதாம் பருப்பை உட்கொண்டவர்களுக்கு 12 வாரங்களில் HbA1c, LDL கொலஸ்ட்ரால் மற்றும் மொத்த கொலஸ்ட்ரால் அளவுகள் குறைந்திருந்தது கண்டறியப்பட்டது.

3. பாதாம் உடல் எலும்புகள் மற்றும் தசை வளர்ச்சிக்கு மிகவும் நன்மை தரும் super food ஆகும். இதில் மெக்னீசியம் மற்றும் புரோட்டீன் அதிக அளவில் உள்ளதால் இது bone strength ஐ மேம்படுத்தவும், muscle recoveryஐ support செய்யவும் உதவுகிறது. இதில் இருக்கும் வைட்டமின் 'ஈ' மூளைக்கு நல்லது.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

## அறிவியல் செய்திகள்!



# ‘அவசர மருந்துகளைக் கொண்டு செல்ல முடியும்’ மீட்புப் பணிகளுக்கு தயாராகும் கரப்பான் பூச்சிகள்: புதிய ஆய்வில் சுவாரஸ்ய தகவல்

ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் மற்றும் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் உதவும் ‘சைபோர்க்’ கரப்பான் பூச்சிகளை உருவாக்கியுள்ளனர். இவை ‘பாராபோர்க்ஸ்’ என்று அழைக்கப்படுகின்றன.

வடக்கு குயின்ஸ்லாந்தில் உள்ள நிலத்தைத் தோண்டி வாழும் பிரமாண்ட கரப்பான்பூச்சிகளை ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். 8.5 செ.மீ வரை வளரக்கூடிய இவை உலகின் அதிக எடை கொண்ட கரப்பான்பூச்சி வகையாகும். ஒவ்வொரு பூச்சியின் மீதும், கேமரா அல்லது மருந்தைச் செலுத்துவதற்கான ஊசிப் போன்ற கருவி அடங்கிய ஒரு சிறிய முதுகுப் பை பொருத்தப்பட்டிருந்தது.

மின் சமிக்ஞைகளைச் சுமந்துச் செல்லும் சிறிய எலக்ட்ரோடுகள் கரப்பான் பூச்சியின் உடலில் பொருத்தப்பட்டன. பின்னர் ஆப்ரேட்டர்கள் அதன் நரம்பியல் மண்டலத்தில் சிறிய சமிக்ஞைகளை அனுப்ப முடியும். இதன் மூலம் தொலைதூரத்தில் இருந்தே அவற்றைக் கேமிங் கன்ட்ரோலர் மூலம் இயக்க முடியும்.

இந்த ஆய்வை எழுத உதவிய பயோரோபாடிக்ஸ் பொறியாளர் தாங் வோடோவன் கூறுகையில், “முதலில் பூச்சியை மயக்க மூட்டுவோம் (தற்காலிகமாக உறங்க வைப்பது). இதனைச் செயல்படுத்தும் நடைமுறையில் அவை எதுவும் உணராமல் இருப்பதை உறுதி செய்ய அவற்றின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும்” என்றார். இறுக்கமான இடைவெளிகளில் நுழைந்து, சிரமமான பரப்புகளில் நகர்ந்து, கடினமான சூழல்களில் உயிர்வாழ்வதால் கரப்பான் பூச்சிகள் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உண்மையான ரோபோக்களை விட இவற்றுக்கு மிகக் குறைவான ஆற்றலே தேவைப்படுகிறது.

ஆய்வகப் பரிசோதனைகளின்போது, ஒரு ‘ஆப்சர்வர்’ கரப்பான் பூச்சி ஒரு இலக்கைக் கண்டுபிடிக்க கேமராவைப் பயன்படுத்தியது. இன்னொரு கரப்பான் பூச்சி ஊசிச் செலுத்தும் உபகரணத்தைப் பயன்படுத்தி, தொலை தூரத்திலிருந்து வழிகாட்டுதல் வழங்கும்போது மருந்தைச் செலுத்தியது. இந்தக் கரப்பான்பூச்சிகள் அவர்களின் அனைத்துச் சோதனைச் சாவடிகளையும் அடைந்தன. ஒட்டுமொத்தமாக மருந்தைச் செலுத்தும் முயற்சிகளில் 72 சதவிகிதம் வெற்றிகரமாக முடிந்தன.

ஒரு பூச்சி அதன் இலக்கிலிருந்து 15 செ.மீ தொலைவிலிருந்து ஊசியைச்செலுத்தும்போது அவை வெற்றியடையும் விகிதம் 95% வரை உயர்ந்தன.

இந்தப் பூச்சிகள் ஒரு கட்டத்தில் சரிந்து விழுந்த கட்டடங்கள் அல்லது குகைகளில் சிக்கியிருக்கும் மனிதர்களைச் சென்றடையும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தடைப்பட்ட சமிக்ஞைகள் ஆபத்தான நிலப்பரப்பு மற்றும் ஊசிகளைப் பாதுகாப்பாகச் செலுத்துவதை உறுதி செய்தல் உள்ளிட்ட சிக்கல்களை ஆராய்ச்சியாளர்கள் இப்போது ஆராய வேண்டும். இறுதியில், விஞ்ஞானிகள் பேரிடர் பகுதிகளுக்குப் பாராபோர்க் கூட்டங்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளனர். அவற்றில் சில, உயிர் பிழைத்தவர்களைத் தேடவும், சில மருந்துகளை எடுத்துச் செல்லவும் அமைக்கப்பட்டுள்ளன.



■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

# தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்



''தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்." - மத்தேயு 10:41

பிரியமானவர்களே, தீர்க்கதரிசிக்கேற்ற பலன் என்றால் அவர் மேல் இருக்கிற அபிஷேகத்தினிமித்தம் முதலில் அவருக்குப் பெரிய மரியாதை கிடைக்கிறது. தேசத்திலே கனம் கொடுக்கப்படுகிறது. தீர்க்கதரிசியோடு கர்த்தர் பேசுகிறார். தீர்க்கதரிசிக்குத் தரிசனத்தில் வெளிப்படுத்தி, சொப்பனத்திலே பேசுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகின்றார். தீர்க்கதரிசியைத் தேவன் மிகுந்த கனத்திற்குரியவராக வைத்திருக்கின்றார்.

"சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது." - 1சாமுவேல் 3:20

எலியா, எலிசா எல்லாம் தீர்க்கதரிசிகள்தான். தேசத்தைக் காப்பதற்காக ராஜாக்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற அநேக தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இஸ்ரவேல் ராஜாவுக்கு விரோதமாகச் சீரிய ராஜா பலமுறை யுத்தத்திற்கு வந்தார். அந்த நேரங்களில் எல்லாம் முன்னமே எலிசா தீர்க்கதரிசிக்கு ஆண்டவர் சீரிய ராஜாவின் திட்டங்களை வெளிப்படுத்திக் கூறி, இஸ்ரவேல் தேசத்தைக் காப்பாற்றியிருக்கிறார். சீரிய தேசத்தின் ராஜா, "நான் போடுகிற திட்டமெல்லாம் எப்படி அந்த இஸ்ரவேல் தேசத்திற்குத் தெரிகிறது, நம்மில் யார் அவர்களுக்கு அறிவிக்கிறார்கள்" என்று கேட்டபொழுது, அந்த வீரர்கள், "ராஜா, நீங்கள் பள்ளியறையில் பேசுகிற வார்த்தைகளைக்கூட இஸ்ரவேல் தேசத்திலுள்ள எலிசா என்கிற தீர்க்கதரிசி, இஸ்ரவேல் ராஜாவுக்கு அறிவிப்பான்" என்று கூறினார்கள். தீர்க்கதரிசிக்குக் கர்த்தர் இரகசியங்களை வெளிப்படுத்துகின்றார்.



சகோதரி சோபியா ஆலன்பால்

சாமுவேல் தீர்க்கதரிசி சவுலை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்.

தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான். தீர்க்கதரிசிக்குக் கொடுக்க வேண்டிய கனத்தையும், மரியாதையையும் கொடுக்க வேண்டும். அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைக் கனத்தோடு நாம் செய்யும்பொழுது, கர்த்தர் மகிமையடைவார். நமக்கு ஏற்ற பலனைத் தேவன் நமக்கு அப்படியே கொடுப்பார்.

எலியா தீர்க்கதரிசியைக் கர்த்தர் கேரீத் ஆற்றண்டையில் காகத்தை அனுப்பி, அப்பமும், இறைச்சியும் கொடுத்துப் போஷிக்கின்றார். கேரீத் ஆற்றில் வருகிற தண்ணீரைக் குடித்துக்



கொண்டிருந்தார். கொஞ்ச நாட்களில் தேசத்தில் மழை இல்லாமல் தண்ணீர் வற்றிப்போனது. அப்பொழுது தேவன் “எலியாவிடம் சாறிபாத் என்கிற ஊருக்குப் போ, அங்கே நான் ஒரு விதவைக்கு உன்னைப் போஷிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறேன்'' என்று சொல்லி அனுப்பினார்.

எலியா அந்த ஊருக்குச் சென்றபொழுது, அந்த விதவை இரண்டு விறகுகளைப் பொறுக்கி, தன்னிடம் இருக்கிற கொஞ்ச மாவையும், கொஞ்ச எண்ணெயையும் வைத்து அடை சுட்டு, தானும், தன் மகனும் சாப்பிட்டுச் சாகலாம் என்று இருந்தார்கள். எலியா தீர்க்கதரிசி அந்த விதவையிடம் உன்னிடம் என்ன இருக்கிறது? என்று கேட்டார். அதற்கு அவள் என்னிடம் ஒரு பிடி மாவுதான் இருக்கிறது என்றாள். அதில் ஒன்றோ, இரண்டோ அடைதான் சுட முடியும். ஆனால் எலியா அந்த மாவில் முதலில் எனக்கு ஒரு சிறிய அடையைச் சுட்டுக் கொண்டு வா என்றார், அவள் அதைச் சுடச் சென்றபொழுது, மழை வந்து தேசத்தில் பஞ்சம் நீங்குகிற வரைக்கும் உன்னிடம் உள்ள மாவு குறையாது. கலயத்தில் உள்ள எண்ணெய் குறையாது என்று கூறினார்.

உடனே அந்தப் பெண் கீழ்ப்படிந்து எலியாவுக்கு ஒரு சிறிய அடையைச் சுட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள். அதிலிருந்து அவளுடைய பானையில் மாவு குறையவில்லை. கலயத்தில் எண்ணெய் குறையவேயில்லை. பஞ்சகாலம் முடிகிற வரைக்கும் தீர்க்கதரிசி சொன்னபடியே நடந்தது. தேசத்தில் மழை பொழிந்து, விளைச்சல் வந்து, அவர்கள் சாப்பிட ஆரம்பிக்கும் வரைக்கும் எலியாவும் போஷிக்கப்பட்டார். அவளும் அவளுடைய வீட்டாரும் போஷிக்கப் பட்டார்கள்.

சாறிபாத் ஊரில் இவள் மட்டும்தான் விதவை என்று சொல்லமுடியாது. இன்னும் அநேகர் இருந்திருக்கலாம். ஆனால் கர்த்தர் இந்த விதவைப் பெண்ணைத் தெரிந்துகொண்டார்.

அந்தப் பெண் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொண்டு, அவருடைய வார்த்தையை விசுவாசித்து செயல்பட்டபோது, பஞ்சகாலம் முடிகிற வரைக்கும் குறைவில்லாமல் புசித்தார்கள்.

எலியாவைக் கர்த்தர் போஷிக்க விரும்பினார். அது பஞ்ச காலம். எங்கும் உணவு கிடைக்கவில்லை. அவர் தம்முடைய தீர்க்கதரிசியைக் காப்பாற்ற வேண்டும். தம்முடைய தீர்க்கதரிசிக்குக் கர்த்தர் ஆகாரம் கொடுக்க வேண்டும். அதற்காக விதவைப் பெண்ணுக்குக் கட்டளையிட்டார். அந்தப் பெண் எலியாவின் வார்த்தையை நம்பி, அவரை ஏற்றுக்கொண்டதால் அவளுடைய குடும்பமும் போஷிக்கப்பட்டது. தீர்க்கதரிசிக்கு ஏற்ற பலன் அந்தப் பெண்ணின்



குடும்பத்திற்கும் கிடைத்தது. அவளும், அவளுடைய மகனும், அவளுடைய தகப்பன் வீட்டார் அனைவரும், அவளுடைய உற்றார், உறவினர், உடன் பிறந்தவர்கள் என எல்லோரும் பஞ்சகாலத்தில் திருப்தியாய் புசித்தார்கள். ஆகவே ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளும்போது, தீர்க்கதரிசிக்கு ஏற்ற பலன் அவளுக்குக் கிடைத்தது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மாத்திரம் அல்ல, இப்பொழுதும் கூட ஊழியர்களை நாம் கனப்படுத்தும் பொழுதும், ஏற்றுக்கொள்ளும்போதும், போஷிக்கும்போதும், நன்மை செய்யும்போதும் தீர்க்கதரிசிகளுக்கேற்ற பலனைக் கர்த்தர் கொடுக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

## நீதிமான்களுக்கேற்ற பலன்!

''தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். "

- மத்தேயு 10:41

நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு நீதிமானுக்கேற்ற பலனைக் கர்த்தர் கொடுக்கிறார். வேதத்தில் நீதிமானுக்குரிய பலன் மிகவும் அதிகமாய் எழுதப்பட்டுள்ளது.

''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது."

-சங்கீதம் 34:15

"...நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.''

- யாக்கோபு 5:16

''நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.''

- சங்கீதம் 92:12

‘‘அவன் (நீதிமான்) என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.” - சங்கீதம் 112:6

‘‘நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.”

- சங்கீதம் 37:29

‘‘...நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்.” - நீதிமொழிகள் 12:12

‘‘...ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.” - சங்கீதம் 37:25

இவ்வாறு நீதிமான்களுக்குரிய ஆசீர்வாதங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

நீதிமானாய் இருக்கிற தேவப்பிள்ளையை அசட்டை பண்ணாமல், அன்புகூர்ந்து ஏற்றுக்கொள்ளும்பொழுது ஆண்டவர் நீதிமானுக்குரிய பலன்களை உங்களுக்குக் கொடுப்பார்.

ஆபிரகாமோடு கூட வந்தவர்தான் லோத்து. அழைக்கப்பட்டவர் ஆபிரகாம்தான். நீதிமானாய் இருந்த ஆபிரகாமோடு இருந்ததற்காகவே ஆசீர்வதிக்கப்பட்டவர் லோத்து.



இன்றைக்கு நாம் எந்த அபிஷேகத்தின் கீழ் ஆசீர்வதிக்கப் படுகிறோம். யார் மேலே உள்ள அபிஷேகத்தின் நிழலில் நாம் சேர்ந்திருக்கும்பொழுது நம்மை ஆசீர்வதிக்கிறது, நம்மை உயர்த்துகிறது, நம்மை மேன்மைப்படுத்துகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் இந்த லோத்திற்கு அது புரியவில்லை. ஒருநேரம் வந்தபொழுது, லோத்துவையும் தேவன் ஆசீர்வதித்ததினாலே, ஆபிரகாம், லோத்து ஆகிய இருவருடைய மந்தைகளும் பெருகி, மந்தை மேய்ப்பர்களுக்குள்ளே சண்டை வந்துவிட்டது. லோத்துவுக்குப் புரியாததினாலே தானும், ஆபிரகாமும் சமம்தான் என்று எண்ணிக்கொண்டு, பிரிந்துபோகத் தயாரானார்.

லோத்துவிடம் ஆபிரகாம், ‘நீ எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போ’ என்றார். உடனே லோத்து ஒரு செழிப்பான பகுதியைத் தெரிந்துகொண்டு, நீதிமானாகிய ஆபிரகாமை விட்டுப் பிரிந்து போனார்.

ஆபிரகாமுக்குத் திரளான மந்தைகள், மேய்ப்பர்கள், வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். நாம் பொறுமையாக இருப்போம். நாம் ஆபிரகாமை விட்டு விலகிப் போகக்கூடாது என்று சொல்லி முடிவு எடுத்திருக்க வேண்டும். ஆனால் லோத்து அதை யோசிக்கவில்லை. நீதிமானாகிய ஆபிரகாமை விட்டுப் பிரிந்து போனதினால் அவருடைய குடும்பம் எப்படிப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

நீதிமான் என்ற நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளும்போது, நீதிமானுக்கேற்ற பலன் உண்டாகிறது.



லோத்து பிரிந்து போவதற்கு முன்பு ஆபிரகாமைத் தேவன் எப்படி ஆசீர்வதித்திருந்தாரோ, அதே அளவு லோத்துவையும் தேவன் ஆசீர்வதித்திருந்தார். மந்தைகள் பெருகியிருந்தன. மந்தை மேய்ப்பர்கள், வேலைக்காரர் பெருகியிருந்தார்கள். நீதிமானுக்கேற்ற ஆசீர்வாதம் லோத்துவுக்கும் உண்டாயிருந்தது.

ஆகவே நல்லோர்களைப் பகைக்காமல், வெறுக்காமல் வாழ நமக்குத் தெரிய வேண்டும். நீதிமான்களையோ, கர்த்தருடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகளையோ, நாம் கனவீனப்படுத்தாமல் வாழ வேண்டும். அவர்களை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களைப் பற்றிக் குறை பேசாமல், தவறாகப் பேசாமல் இருந்தாலே போதும். ஆனால் நாம் அவர்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குரிய காரியங்களைச் செய்யும்பொழுது அவர்களுக்குரிய பலனை நாமும் பெறுவோம்.

''மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக் கடவன்" - கலாத்தியர் 6:6 என்று பவுல் எழுதியுள்ளார்.

கர்த்தருடைய வசனம் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது. நாம் யார் மூலம் போஷிக்கப்படுகிறோம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய ஆத்துமா என்றென்றைக்கும் வாழப் போகிறது.

நாம் ஒருவரிடம் வேலை பார்த்தால் நாம் வேலை பார்க்கிற எஜமானுக்குத் துரோகம் செய்யக்கூடாது என்று உலகத்தார் சொல்லுவார்கள். அவர்களிடம் வேலை பார்த்து வருகிற சம்பாத்தியத்தில் வாங்கிச் சாப்பிட்ட உப்பு, அது என்னுடைய சரீரத்தில் இருக்கிறது. ஆகவே நான் அவர்களுக்குத் துரோகம் பண்ணமாட்டேன் என்று சொல்லுவார்கள். இந்த மண்ணான சரீரம் ஒருநாள் அடக்கம் பண்ணப்பட்டு அழிந்து போகும். ஆனால் ஆத்துமா என்றென்றைக்கும் வாழும்.

ஆகவே ஆத்துமாவைப் போஷிக்கின்ற, ஆத்துமாவை என்றைக்கும் அழியாமல் பாதுகாக்கும்படி உங்களுக்கு உபதேசம் பண்ணுகிறவர்கள் அதிலும் மேன்மையானவர்கள்.

தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளும் போது, தீர்க்கதரிசிக்கு ஏற்ற பலனைப் பெற முடியும். நீதிமானை ஏற்றுக்கொள்ளும்போது நீதிமானுக்கு ஏற்ற பலனைப் பெற முடியும்.

ஆம், பிரியமானவர்களே, இந்த வசனத்தைப் பிடித்துக் கொண்டு, அதன்படி வாழுங்கள். வசனத்தில் எழுதப்பட்டுள்ள அசீர்வாதங்களை நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். ஆமென்! ■

ஆசீர்வாதம் TV

# கிளை அலுவலகங்கள்!

### கீழ்ப்பாக்கம்
எண். 3, இரண்டாம் தெரு,
கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை – 10.

### எக்மோர்
No. 5A/5, காந்தி இர்வின் ரோடு,
இம்பீரியல் ஹோட்டல் அருகில்,
எக்மோர் ரயில் நிலையம் எதிரில்,
எக்மோர், சென்னை – 8.

### தாம்பரம்
69, அரசன் காம்ப்ளக்ஸ்,
No. 70, G.S.T. ரோடு,
பஸ்டாண்டு – ரயில் நிலையம் எதிரில்,
மேற்குத் தாம்பரம்,
சென்னை – 45.

### திருவான்மியூர்
எண். 121, 5வது கிழக்குத் தெரு,
காமராஜர் நகர்,
பாம்பே டையிங் பின்புறம்,
(பாங்க் ஆஃப் பரோடா எதிரில்)
திருவான்மியூர். சென்னை – 41.

### நாகர்கோவில்
டேவிட் காம்ப்ளக்ஸ்,
WCC, ரோடு,
WCC, பஸ் நிறுத்தம் அருகில்,
நாகர்கோவில் – 1.

### ஈரோடு
விஜி காம்ப்ளக்ஸ்,
இந்தியன் வங்கி எதிரில்,
பெரியார் நகர், ஈரோடு – 638 001.

### போரூர்
6/85, குன்றத்தூர் மெயின் ரோடு,
காவேரி ஸ்வீட் ஸ்டால் மாடியில்,
சென்னை மொபைல்ஸ் எதிரில்,
போரூர், சென்னை – 600 116

### வேளச்சேரி
1A, 100 அடி, தரமணி லிங்க் ரோடு,
வேளச்சேரி விஜயநகர்
பஸ் டெர்மினஸ் எதிரில்,
வேளச்சேரி, சென்னை – 600 042.

### பெரம்பூர்
No. 103, பெரம்பூர் வியாசர்பாடி
ஹை ரோடு, குமாரசாமி தெரு,
பஸ் டெர்மினஸ் to
P.P. ரோடு அருகில்,
பெரம்பூர், சென்னை – 600 011.

### ஆவடி
No. 230, CTH ரோடு,
செக்போஸ்ட் அருகில்,
இம்மாகுலேட் பள்ளி எதிரில்,
ஆவடி, சென்னை – 600 054.

### சேலம்
R.B.T. மால், முதல் மாடி,
A.R.R.S. மல்டி பிளக்ஸ் ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
சேலம் – 4.

### கோயம்புத்தூர்
நம்பர் 203, 2ஆவது மாடி,
ஸ்ரீவாசவி காம்ப்ளக்ஸ்,
பெரிய கடை வீதி,
மணிக்கூண்டு அருகில்,
கோயம்புத்தூர் – 641 001.

### கோயம்புத்தூர் (காந்திபுரம்)
878, சத்தியமங்கலம்
மெயின் ரோடு,
G.P. மருத்துவமனை எதிரில்,
காந்திபுரம்,
கோயம்புத்தூர் – 641 012.

### திருச்சி
ஸ்டோனி மெடோஸ், தரைத்தளம்,
169, 10வது மெயின் ரோடு,
E.S.I. மருத்துவமனை எதிரில்,
பொன் நகர், திருச்சி – 1

### திருநெல்வேலி
16/40, திருவனந்தபுரம் ரோடு,
பாரத ஸ்டேட் வங்கி அருகில்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

### வேலூர்
No. 5, KGM. காம்ப்ளக்ஸ்,
ஆரணி ரோடு,
பாகாயம் பஸ்டாண்டு அருகில்,
பாகாயம், வேலூர் – 2.

### திண்டுக்கல்
அல்லேலூயா ஹோம்,
A/56, MVM நகர்,
திண்டுக்கல் – 624 001.

### மதுரை
தாமஸ் காம்ப்ளக்ஸ்
கிரேஸ் பல்மருத்துவமனை மாடியில்,
46, நேதாஜி ரோடு,
மதுரை – 625 001.

## BLESSING CENTRE
**39, மணலி நெடுஞ்சாலை, மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை – 60.**

மேற்கண்ட ஆசீர்வாதம் டிவியின் கிளை அலுவலகங்களுக்கு நீங்கள் நேரில் சென்று உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம். மேலும், சகோதரிகளாகிய உங்களுக்கு நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் அங்குச் சென்று தேவனுக்குத் துதி ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கலாம்.

# நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் DTHல் (AIRTEL, SUN DIRECT, TATA PLAY) ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்." - ஏசாயா 32:20. "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.'' -2கொரி.9: 6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## துதியுங்கள்! ஜெபியுங்கள்!

அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் (2கொரிந்தியர் 1:11).



அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் (2கொரி. 4:15) என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

# நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!

**9952432020@tmb என்ற UPI ID**

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay PhonePe Paytm

**9345678981 (Allen Paul)**

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

## இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

**www.blessingtv.tv/donation** என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### வங்கி மூலம்

| ICICI | TMB |
|---|---|
| 'BLESSING TV' | 'BLESSING TV' |
| A/C No. : 6172 0103 4129 | A/C No. : 0041 5031 0875 177 |
| BRANCH : SIVAKASI | BRANCH : VIRUDHUNAGAR |
| IFS CODE - ICIC 000 6172 | IFS CODE : TMBL 000 0004 |

Powered by Razorpay

SCAN & PAY WITH ANY UPI APP

G Pay PhonePe Paytm

**JESUS LOVES**
Blessing TV

### மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

### டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.

வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.


**முகவரி:** பிளஸ்ஸிங் டி.வி, எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் – 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி, எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010, தமிழ்நாடு.
Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv


மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)

தேவனுக்கே மகிமை!

## 24 மணி நேர தமிழ் கிறிஸ்தவ செயற்கைக்கோள் தொலைக்காட்சி (Satellite TV) பார்த்துப் பயனடையுங்கள்!

இப்பொழுது, நமது ஆசீர்வாதம் டிவி

TATA PLAY சேனல் நம்பர் **1594**

airtel digital TV சேனல் நம்பர் **815**

SUN DIRECT சேனல் நம்பர் **459**

அனைத்து கேபிள்களிலும் ஒளிபரப்பப்படுகிறது. தேவப்பிள்ளைகள் பார்த்துப் பயனடையுங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!

**For any Details Please Contact: 9994 73 9994**

## சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!

**ஞாயிறு ஆராதனைகள் :**

**இரண்டாம் ஆராதனை :**
காலை 7 மணி முதல் 9 மணி வரை

**மூன்றாம் ஆராதனை :**
காலை 10 மணி முதல் 12 மணி வரை

தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

**ஞாயிறு முதல் ஆராதனை :**
காலை 5 மணி முதல் 6 மணி வரை

**புதன் கிழமை**
**Mid Week Service (சிறப்பு ஆராதனை)**
மாலை 7 மணி முதல் 8.30 மணி வரை

**வெள்ளிக்கிழமை**
**பெண்கள் கூட்டம்:**
காலை 11 மணி முதல் 1 மணி வரை

Blessing Centre,
39, Manali High Road,
Manjampakkam,
Madhavaram,
Chennai - 600 060.

## விருதுநகர் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரம்!

காலை 10 மணி முதல் 12 மணி வரை

எழுப்புதல் ஜெப மையம்,
சூலக்கரை,
விருதுநகர்.

மேலும் விபரங்களுக்கு : 93456789 83, 9994 07 9994